1974 ஏப்ரல் 2]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் கோவளம் கடற்கரை நல்ல வளை வாகவும், அலை வேகமில்லாமலும், மணற்பாங்காகவும், வெளி நாட்டவர்களும் உள்நாட்டவர்களும் குளிக்க நல்ல வசதியாகவும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தை நல்ல முறையில் அபி விருத்தி செய்து சுற்றுப் பயணிகளுக்கு வசதிசெய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, ஐக்கிய நாடுகள் திட்டக் குழு இந்தப் பகுதிகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து இருக்கிறார்கள். அந்தப் பகுதியை வளப் படுத்தலாம் என்று குறிப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக் கிறார்கள். அறிக்கை வந்த பிறகு அதன் அடிப்படையில் காரியங்கள் துவக்கப்படுவதற்கு மத்திய அரசின் உதவி கோரப் படும். மாநில அரசும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

பூமிதான இயக்கம்

* 691 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை பூமிதான இயக்கத்தின் மூலம் கிடைத்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் என்ன, மாவட்ட வாரியாக ?

(இ) அது எப்படி விநியோகம் செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ)	1. செங்கற்பட்டு	1,660	ஏக்கர்கள்.
	2. தென் ஆர்க்காடு	1,528	”
	3. வட ஆர்க்காடு	395	”
	4. தஞ்சாவூர்	874	”
	5. திருச்சிராப்பள்ளி	2,254	”
	6. சேலம் & தர்மபுரி	1,902	”

7. இராமநாதபுரம்	2,347	ஏக்கர்கள்.
8. திருநெல்வேலி	2,769	”
9. கோயம்புத்தூர்	5,884	”
10. மதுரை	3,490	”
11. கன்னியாகுமரி	51	”
12. நீலகிரி	56	”
	23,210	ஏக்கர்கள்.

(இ) 1958-ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பூதான் யக்ஞ சட்டத்திற்குட்பட்டு அவைகள் விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

திரு. எம். சுரேந்திரன் : இங்கே சொல்லப்பட்டிருக்கிற நிலங் களுடைய நிர்வாகம் எப்படி இருக்கிறது? அந்த நிலத்தை வைத்திருக்கிறவர்கள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய் கின்ற வகையில் இதர தொழில்களையும், காரியங்களையும் சரிவரச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

பாரத் சேவக் சமாஜத்திற்கு மானியம்

* 692 வினா—**திரு. ஜி. ராமசாமி** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமைந்துள்ள பாரத் சேவக் சமாஜ், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் சமூகப்பணி மன்றம் இவைகளுக்கு அரசு மானியம் ஏதேனும் வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?